O.S.No.346/2017

வா.சா.1.திரு.குணசீலன் த.பெ.கணேசன்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு** விசாரணை

தாவா சர்வே எண் 894/21, 894/32 ஆகும். தாவா சொத்தை எனது தந்தையும், சகோதரி தானா செட்டில்மெண்ட் எழுதி கொடுத்து மூலம் எனக்கு பாத்தியம். எனது தந்தைக்கும் சகோதரிக்கும் அந்த சொத்து எவ்வாறு பாத்தியப்பட்டது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்து ஆதியில் இருந்து கிராம நத்தமாக உள்ளது என்றால் ஆவணப்படி அது கிராம நத்தமாகதான் உள்ளது ஆனால் எங்கள் இடத்திற்கு எதிரே உள்ளவர்களின் இடத்தின் கிரைய ஆவணத்தை வா.சா.ஆ 2 ஆக தாக்கல் செய்துள்ளேன் அதில் நான்குமாலில் தாவா சொத்து எங்கள் இடம் என காட்டப்பட்டுள்ளது. சர்வே எண் 894/21 தற்போது வருவாய் கணக்கில் சந்து என உள்ளது என்றால் UDR ல் சந்து என மாறியுள்ளது ஆனால் அது தவறு என மேல்முறையீடு சென்று எனக்கு ஆதரவாக தீர்ப்பு ஆகிவிட்டது. அந்த ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சர்வே எண்ஒ 894/32 தற்போது வருவாய் கணக்கில் சர்கார் புறம்போக்கு என உள்ளது என்றால் சரிதான் ஆனால் ஆரம்பத்தில் இருந்து அந்த சொத்து எங்களது அனுபவத்திலும் அதில் நாங்கள் வீடு கட்டியும் தற்போது அனுபவித்து வருகிறோம். எங்கள் வீடு அமைந்துள்ளது சர்வே எண் 894/20 ல் தான் என்றாலும், சர்வே எண் 894/32 ல் இல்லை என்றாலும் சரியல்ல. 1 ம் பிரதிவாதி எனக்கு பங்காளி முறையாவார். அவர் வீடும் எங்கள் வீடும் அருஅருகே உள்ளது என்றால் சரிதான். 1 ம் பிரதிவாதி தான் நாங்கள் சந்தை மறித்து வீடுகட்டியிருப்பதாக ரிட் மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த ரிட் மனுவில் ஆக்கிரமிப்பை அகற்ற சொல்லி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான் அதில் நான் தரப்பினர் அல்ல. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவுபடி வல்லாளபட்டி வருவாய் ஆய்வாளர் அவர்கள் 14.12.2017 ல் எனக்கு அறிவிப்பு கொடுத்தார் என்றால் சரிதான். அதன்பிறகு 3 ம் பிரதிவாதி 26.12.2017 அன்று ஆக்கிரமிப்பை அகற்ற சொல்லி எனக்கு அறிவிப்பு கொடுத்தார் என்றால் சரிதான். அந்த சொத்து எங்களுக்கு பாத்தியப்பட்டது என்று 3 ம் பிரதிவாதி இடத்தில்

ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல நான் அனைத்து ஆவணங்களையும் தாக்கல் செய்தேன். நான் கூறுவதுபோல் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் நான் இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சர்வே எண் 894/21 உள்ள சந்தில்தான் நாங்களும், எங்கள் வீட்டிற்கு அருகே உள்ளவர்களும் பழங்கி வருகிறார்கள் என்றால் சரியல்ல. வல்லாளபட்டி பேரூராட்சி என்றால் சரிதான். நான் கட்டிட அனுமதி வாங்கி வீடு கட்டியுள்ளதாக சொல்லியுள்ளதால் விதிகளுக்கு உட்பட்டு இடம் விட்டு தான் கட்டியிருக்கிறேன் என்றால் சரிதான். நான் மேலும் கட்டிட விரிவாக்கத்திற்காக அனுமதி கோரியபோது அந்த மனுவை பேரூராட்சியில் வாங்க மறுத்துவிட்டார்கள். சர்வே எண் 894/20 ல் எனது வீடு அமைந்துள்ளது என்றால் சரியல்ல. சர்வே எண் 894/20 , சர்வே எண் 894/32, சர்வே எண் 894/21 ல் சேர்ந்து அமைந்துள்ளது. சர்வே எண் 894/20 ல் தான் எனது வீடு அமைந்துள்ளதாக வருவாய் கணக்கில் உள்ளது என்றாலும் இந்த வழக்கிற்காகசர்வே எண் 894/20, சர்வே எண் 894/21, சர்வே எண் 894/32 ல் சேர்ந்து அமைந்துள்ளது என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல வருவாய் கணக்கு தவறாக உள்ளது. நான் காவல் துறையில் காவலராக பணியில் இருந்து வருகிறேன். நான் அரசு துறையில் பணியாற்றி கொண்டு அரசுக்கு பாத்தியப்பட்ட சர்வே எண் 894/21 ல் ஆக்கிரமித்து சந்தை மறித்து வீடுகட்டிவிட்டு 3 முதல் 5 பிரதிவாதிகளை வீண் அலகலிப்பு செய்ய வேண்டும் என்ற காரணத்திற்காக வீண் தாவா செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை பிறப்பித்த உத்தரவுபடி ஆக்கிரமிப்பை அகற்றாமல் இந்த பொய் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.